# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.2.2.B

எண்ணியல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - தநாஅபு - பயிற்சி 1.2.4-5

## எண்ணியல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - தநாஅபு - பயிற்சி 1.2.4-5

4) கபிலன் தன்னிடம் 10 பென்சில்களை வைத்திருந்தார். அதில் 2 பென்சில்களைச் செந்திலுக்கும் 3-ஐக் கார்த்திக்கும் கொடுத்து விட்டார். மறுநாள் அவருடைய தந்தை மீண்டும் 6 பென்சில்கள் தருகிறார். மொத்தப் பென்சில்களிலிருந்து 8 பென்சில்களை அவருடைய தங்கைக்குக் கொடுத்தால் அவரிடம் மீதம் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை யாது?

கபிலன் தன்னிடம் வைத்திருந்த பென்சில்களின் எண்ணிக்கை } = 10

கபிலன் செந்திலுக்கு கொடுத்த பென்சில்களின் எண்ணிக்கை } = 2

கபிலன் கார்த்திக்கு கொடுத்த பென்சில்களின் எண்ணிக்கை } = 3

கபிலன் தற்போது வைத்திருக்கும் பென்சில்களின் எண்ணிக்கை } = 10 - 2 - 3

= 10 - 5 = **5**

மறுநாள் கபிலனின் தந்தை அவருக்குத் தந்த பென்சில்களின் எண்ணிக்கை } = 6

கபிலன் தற்போது வைத்திருக்கும் மொத்தப் பென்சில்களின் எண்ணிக்கை } = 5 + 6 = **11**

மொத்தப் பென்சில்களிலிருந்து கபிலன் தன் தங்கைக்குக் கொடுத்த பென்சில்களின் எண்ணிக்கை } = 8

∴ கபிலனிடம் மீதம் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை } = 11 - 8 = **3**


கபிலனிடம் மீதம் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை = 3

5) ஒரு மின்தூக்கி தற்போது தரை தளத்தில் உள்ளது. அது 5 தளங்கள் கீழே செல்கிறது. பிறகு அங்கிருந்து 10 தளங்கள் மேலே செல்கிறது எனில், தற்போது மின்தூக்கி எந்த தளத்தில் இருக்கும்?

மின்தூக்கி தரை தளத்தில் உள்ள போது அதன் நிலையை பூஜ்ஜியம் எனவும், கீழே செல்லும் போது குறைமுழுவை நோக்கிச் செல்வதாகவும், மேலே செல்லும் போது மிகைமுழுவை நோக்கிச் செல்வதாகவும் கொள்க.

### விடைகாணும் படிகள்

- முதலில் மின்தூக்கி தரை தளத்தில் இருந்து 5 தளங்கள் கீழே செல்கிறது. எனவே, எண்கோட்டில் -5-ஐக் குறிக்க பூஜ்ஜியத்தில் தொடங்கி குறைமுழுத் திசையை நோக்கி அதாவது இடதுபுறமாக 5 அலகுகள் நகர வேண்டும்.
- பின்னர் மின்தூக்கி அங்கிருந்து 10 தளங்கள் மேலே செல்கிறது. எனவே, -5-லிருந்து 10 அலகுகள் மிகைமுழுத் திசையை நோக்கி அதாவது வலதுபுறமாக நகர வேண்டும்.




தற்போது மின்தூக்கி தரை தளத்தில் இருந்து 5 தளங்கள் மேலே இருக்கும்.

## Information Rights & Disclaimers


Sum & solution prepared on Wednesday 1st June, 2022 :: 17:22 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.